सत्यमेव जयते

புதுச்சேரி அரசு




மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

திரு **K. கைலாஷ்நாதன்** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

ஆகஸ்ட் 24, 2026

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

திரு. **K. கைலாஷ்நாதன்** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில்

ஆற்றிய உரை

**"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி."**
- குறள்

கொடை, இரக்க குணம், நீதி தவறாத ஆட்சி, குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய நான்கும் உடையவன் அரசர்களுக்கு எல்லாம் ஒளிவிளக்கு ஆவான்.

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே !***
***மாண்புமிகு உறுப்பினர்களே !***
***வணக்கம்.***

**ப**தினாறாவது சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரின் தொடக்க நாளில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சரவைக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2.** இந்தப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப, பொறுப்போடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் தங்களது கடமைகளை நிறைவேற்றி புதுச்சேரி மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றுவீர்கள் என்ற

நம்பிக்கை எனக்கு உள்ளது. நமது புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தாங்கள் அனைவரும் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது.

**மக்களின் ஆணை**

**3.** மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி அவர்களின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மீது நம்பிக்கை வைத்து புதுச்சேரி மக்கள் மீண்டும் ஒருமுறை ஆட்சி அமைக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளார்கள். மக்கள் நலன், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக நீதியை முன்னிலைப்படுத்தும் அரசின் செயல்பாடுகளின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இந்த மக்கள் தீர்ப்பு காட்டுகிறது.

**4.** மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், பாரதப் பிரதமர் மின்-பேருந்து சேவைத் திட்டம், பொலிவுறு நகரத் திட்டம், CITIIS திட்டம், மத்திய நிதியுதவி திட்டங்கள் மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்களின்கீழ் ₹ 760 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்திருப்பதை இந்த பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**5.** அதேபோல், ₹ 1,570 கோடிக்கும் அதிகமான முதலீட்டில் பல்வேறு முக்கிய உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் பாரதப் பிரதமர் அடிக்கல் நாட்டியுள்ளார். இத்திட்டங்களில் பிரெஞ்சு வளர்ச்சி முகமை நிதியுதவித் திட்டங்கள்,

மாநிலங்களுக்கான மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டம், மத்திய அரசு திட்டங்கள், மின்சாரம், தொழில்துறை, விளையாட்டு மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்கள் அடங்கும்.

**6.** இந்தத் திட்டங்கள் புதுச்சேரியின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், நகர்ப்புற வசதிகளை மேம்படுத்தவும், போக்குவரத்து இணைப்பை அதிகரிக்கவும் உதவும். மேலும், புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இத்திட்டங்கள் முக்கிய பங்களிக்கும்.

**நிதிசார் செயல்திறன்**

**7.** 2024-25 ஆம் நிதியாண்டில் ₹ 12,346.80 கோடியாக இருந்த மொத்த வருவாய், 2025-26 ஆம் நிதியாண்டில் ₹ 13,397.69 கோடியாக உயர்ந்து 8.51 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அதேபோல், ஒன்றிய ஆட்சிப்பரப்பின் சொந்த வருவாய் ₹ 6,848.29 கோடியிலிருந்து ₹ 7,631.53 கோடியாக உயர்ந்து 11.44 விழுக்காடு வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

**8.** 2024-25 ஆம் நிதியாண்டில் ₹ 12,307.66 கோடியாக இருந்த மொத்தச் செலவினம், 2025-26 ஆம் நிதியாண்டில் ₹ 13,111.45 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 6.53 விழுக்காடு அதிகம். குறிப்பாக, மூலதனச் செலவினம் ₹ 447.48 கோடியிலிருந்து ₹ 765.59 கோடியாக உயர்ந்து 71.09 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

**பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு**

**9.** புதுச்சேரியின் பொருளாதாரம் தொடர்ந்து நல்ல வளர்ச்சியைப் பெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 2020-21 ஆம் ஆண்டில் (–)2.21 விழுக்காடாக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம், 2025-26 ஆம் ஆண்டில் 8.12 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி, தேசிய வளர்ச்சி விகிதத்தை விட அதிகமாக உள்ளது.

**10.** புதுச்சேரியின் தனிநபர் வருமானம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. 2025-26 ஆம் நிதியாண்டில் ₹ 3,23,745-ஆக இருந்த தனிநபர் வருமானம், 2026-27 ஆம் நிதியாண்டில் ₹ 3,44,926-ஆக உயர்ந்துள்ளது. இது 6.5 விழுக்காடு வளர்ச்சியாகும்.

**நல்லாட்சி மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தங்கள்**

**11.** நிர்வாகத் திறனை வலுப்படுத்தவும், மக்களுக்கு அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் கிடைப்பதை உறுதி செய்யவும் எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அதற்காக, அரசு துறைகளில் பல ஆண்டுகளாக காலியாக இருந்த பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், தகுதி மற்றும் வெளிப்படைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு

நேரடி நியமனம் மூலம் சுமார் 4,160 பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன. மேலும், இந்த ஆண்டில் சுமார் 1,000 புதிய பணியிடங்களை எழுத்துத் தேர்வு மூலம் நிரப்புவதற்கான அறிவிப்பும் வெளியிடப்படும். இதன் மூலம் அரசு நிர்வாகம் வலுப்பெறுவதோடு, இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

**12.** அரசுப் பணியாளர் தேர்வை வெளிப்படையாகவும், விரைவாகவும் நடத்துவதற்காக, 'புதுச்சேரி தேர்வாணையம்' அமைக்கப்பட்டுள்ளது. இனி அரசிதழ் பதிவு அல்லாத குரூப்-B மற்றும் குரூப்-C பணியிடங்களுக்கான தேர்வுகளை இந்த ஆணையம் நடத்தும். ஒருங்கிணைந்த உயர்நிலைத் தேர்வு, ஒருங்கிணைந்த மேல்நிலைத் தேர்வு மற்றும் ஒருங்கிணைந்த பட்டதாரி நிலைத் தேர்வு மூலம் தகுதியானவர்களைத் தேர்வு செய்யும் நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால், ஒவ்வொரு துறையும் தனித்தனியாக தேர்வு நடத்த வேண்டிய அவசியம் குறையும். நிர்வாக செயல்திறன் மேம்பட்டு, தேர்வு நடைமுறைகள் விரைவாக முடிவடைவதுடன், இளைஞர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் குறையும்.

**எளிதாக தொழில் தொடங்குவதற்கான சீர்த்திருத்தங்கள்**

**13.** அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்கவும், தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும் எனது அரசு பல்வேறு சீர்த்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. தொழில் தொடங்குவதற்கான நடைமுறைகள்

எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. தேவையற்ற விதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளன. இதனால், புதுச்சேரியில் தொழில் செய்வதற்கும் வாழ்வதற்கும் ஏற்ற சூழல் உருவாகியுள்ளது. இந்த முயற்சிகளின் பலனாக, மத்திய அமைச்சரவைச் செயலகம் வெளியிட்ட ஒழுங்குமுறைச் சீர்த்திருத்த தரவரிசையில் புதுச்சேரி தேசிய அளவில் 7-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

**14.** இந்தச் சீர்த்திருத்தங்களை வலுப்படுத்தும் வகையில், புதுச்சேரியில் எளிதில் தொழில் தொடங்குவதற்கான சட்டம், 2025 இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுமதிகளை வழங்குதல், காலக்கெடு முடிந்தால் அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதுதல் போன்ற நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குடிமக்கள் நம்பிக்கைச் சட்டம், 2025 மூலம் சிறிய அளவிலான விதிமீறல்களுக்கு, குற்றவியல் நடவடிக்கைகள் நீக்கப்பட்டுள்ளன. இதனால், தொழில் தொடங்குவோருக்கு நம்பிக்கையான சூழல் உருவாகியுள்ளது.

**15.** இந்த முயற்சிகளைத் தொடர்ந்து, கூடுதலாக 28 முக்கியத் துறைகளில் இரண்டாம் கட்ட சீர்த்திருத்தங்களை எனது அரசு தொடங்கியுள்ளது. இதன் மூலம் புதிய முதலீடுகள் அதிகரிக்கும், வேலைவாய்ப்புகள் உருவாகும், தொழில் மற்றும் வணிகத்திற்கு ஏற்ற இடமாக புதுச்சேரியின் நிலை வலுப்பெறும். இந்தச் சீர்த்திருத்தங்களின் பலனாக, மாநிலங்களுக்கான மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ், கூடுதலாக ₹ 400 கோடி நிதியுதவி பெறும் தகுதியை புதுச்சேரி அடைந்துள்ளது.

**16.** புதுச்சேரியின் நிலையான வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் பல முக்கியத் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை இப்போது இப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மூலதனத் திட்டங்கள்**

**(i) ஸ்மார்ட் சிட்டி திட்டம் :**

**17.** ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ், 2025-26 ஆம் ஆண்டில் புதுச்சேரியில் பல முக்கியப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வீட்டு வசதி, நகர்ப்புற உள்கட்டமைப்பு, போக்குவரத்து, பாரம்பரியக் கட்டிடப் பாதுகாப்பு, மின்னாளுமை போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை இந்த பேரவையின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

**18.** அண்ணா திடலில் ₹ 14.53 கோடி மதிப்பீட்டில் மினி விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சின்னையாபுரத்தில் முதல் கட்டமாக குடிசைவாழ் மக்களுக்காக ₹ 23.45 கோடி செலவில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. குமரகுருபள்ளத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்காக ₹ 47 கோடி மதிப்பீட்டில் மலிவு விலை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. புல்வார் பகுதியில் ₹ 52.50 கோடி செலவில் பாதாள சாக்கடை அமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**19.** பெரிய வாய்க்கால் மேம்பாட்டுப் பணி ₹ 26 கோடி மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நகரப் போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில் நவீன ஸ்மார்ட் பேருந்து நிறுத்தங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 25 மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புதிய பேருந்து சேவைக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

**20.** மின்னாளுமைத் திட்டத்தின்கீழ், ₹ 99.63 கோடி மதிப்பீட்டில் நவீன ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. பாரம்பரியக் கட்டிடங்களைப் பாதுகாக்கும் வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க பிரெஞ்சு பள்ளிக் கட்டிடம் ₹ 10.50 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தாவரவியல் பூங்கா ₹ 9.89 கோடி செலவில் சீரமைக்கப்பட்டு உள்ளது. மேலும், கடலூர் சாலையில் AFT மில் அருகே ₹ 55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணி, 2027 மார்ச் மாதத்திற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**21.** CITIIS திட்டத்தின்கீழ், துப்ராயப்பேட்டை மற்றும் ரெட்டியார்பாளையம் – லாம்பர்ட் சரவணன் நகர் பகுதிகளில் புதிய வீட்டு வசதித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், 850-க்கும் மேற்பட்ட குடிசைவாழ் மக்கள் பயனடைந்துள்ளனர்.

**(ii) மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டம் (SASCI) :**

**22.** புதுச்சேரியின் வளர்ச்சிக்காக தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாநிலங்களுக்கான மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ் புதுச்சேரியை இணைத்து, 2025-26 ஆம் ஆண்டில் புதுச்சேரிக்கு ₹ 227.34 கோடி நிதி வழங்கிய மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**23.** 4.7 ஏக்கர் பரப்பளவில் பாரதப் பிரதமரின் 'ஏக்தா மால்' அமைப்பதற்காக மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டத்தின், பகுதி II-இன் கீழ் மத்திய அரசு ₹ 128.48 கோடி நிதி ஒப்புதல் அளித்துள்ளது. இதில், முதல் தவணையாக ₹ 64.24 கோடி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**24.** மாண்புமிகு பாரதப் பிரதமரின் வழிகாட்டுதலின்கீழ், சாலை வசதிகளையும் பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும் பல உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திருபுவனை, திருக்கனூர், மண்ணாடிப்பட்டு தொகுதிகளில் ₹ 11.56 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வில்லியனூரில் ₹ 7.40 கோடி மதிப்பீட்டில் கஸ்தூரிபாய் திருமண மண்டபம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், இந்த நிதியாண்டில் புதுச்சேரி முழுவதும் ₹ 5.75 கோடி செலவில் 100 நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட உள்ளன.

**25.** இளைஞர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்கவும், நவீன விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் எனது அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மாகி, பந்தக்கல் பகுதியில் அமைந்துள்ள ஐ.கே. குமரன் அரசு மேல்நிலைப் பள்ளியில் FIFA தரத்திலான செயற்கைப் புல்தரை கால்பந்து மைதானம் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், புதுச்சேரியில் மூன்று, காரைக்காலில் ஒன்று, ஏனாமில் ஒன்று என மொத்தம் ஐந்து செயற்கை டென்னிஸ் மைதானங்கள் ₹ 11.88 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**(iii) நபார்டு (NABARD) :**

**26.** நபார்டு நிதியுதவியின்கீழ், 2025-26 ஆம் ஆண்டில் புதுச்சேரி பகுதியில் ₹ 107.66 கோடி மதிப்பீட்டில் பல்வேறு உள்கட்டமைப்பு மற்றும் நீர்வள மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. காரைக்கால் பகுதியில் ₹ 150.49 கோடி மதிப்பீட்டில் கிராமப்புற மற்றும் உட்புற சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் கிராமப்புற போக்குவரத்து வசதி வலுப்பெறும்.

**(iv) தேசிய வீட்டு வசதி வங்கி :**

**27.** தேசிய வீட்டு வசதி வங்கியின் நிதியுதவியோடு மோகன் நகர் வடிகால் வாய்க்கால் கட்டுமானப் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. முருங்கப்பாக்கம் பகுதியில் ஆத்து வாய்க்கால் இடப்புறக் கரையில் சிமெண்ட் கான்கிரீட் கால்வாய் மற்றும் ஆய்வுப் பாதை அமைக்கவும், பாப்பம்மாள் கோயில் வடிகாலை பெருமாள் கோயில் தெருவில் இருந்து வைத்திக்குப்பம் வரை மறுகட்டமைக்கவும், ₹ 17.88 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இந்தப் பணிகள் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்தி, மழைநீர் மற்றும் வெள்ள பாதிப்பைக் குறைக்க உதவும்.

**(v) உயர்மட்டச் சாலை வழித்தடம் :**

**28.** சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆகியவற்றின் ஆதரவுடன் புதுச்சேரியில் பல முக்கிய சாலைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**29.** கணபதிசெட்டிக்குளம் முதல் ராஜீவ் காந்தி சதுக்கம் வரை கிழக்குக் கடற்கரைச் சாலை ₹ 15 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலை 32-ல் இந்திரா காந்தி சதுக்கம் முதல் ராஜீவ் காந்தி சதுக்கம் வரை ₹ 436.18 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**30.** போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில், நடேசன் நகர் முதல் முள்ளோடை வரை உயர்மட்ட சாலை அமைக்கவும், தேசிய நெடுஞ்சாலை 32-ஐ நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தவும், ₹ 1,500 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதேபோல, காரைக்கால் பகுதியில் நண்டலாறு முதல் வாஞ்சூர் வரை தேசிய நெடுஞ்சாலை 45A-வை மேம்படுத்தும் பணிகள் ₹ 57 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**(vi) புதுச்சேரியின் டிஜிட்டல் முன்னேற்றம் – தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் :**

**31.** தகவல் தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் தொழில் துறைகளில் புதுச்சேரி முக்கிய மையமாக உருவாகி வருகிறது. உழவர்கரை நகராட்சி - தட்டாஞ்சாவடியில் மத்திய அரசின் ஒப்புதலோடு ₹ 725 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இந்திய அளவில், நகர்புற உள்ளாட்சி அமைப்பால் உருவாக்கப்படும் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் இதுவாகும். இந்தத் திட்டத்தின் மூலம் அடுத்த பத்து ஆண்டுகளில் சுமார் 30,000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(vii) முதல் பன்முக சிறப்புப் பொருளாதார மண்டலம் :**

**32.** கரசூரில், பன்முக சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பிப்டிக் நிறுவனம் செயல்படுத்தும் இந்தத் திட்டம், புதுச்சேரியின் தொழில்துறை வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கும். மேலும், புதுச்சேரியின் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலமாகவும் இது அமையும்.

**33.** இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் தனியார் பங்களிப்புடன் ₹ 2,500 கோடி முதலீட்டில், 213.12 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், அடுத்த பத்து ஆண்டுகளில் சுமார் 40,000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திறன்மிக்க இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை இது வழங்கும்.

**(viii) புதுச்சேரி விமான நிலைய விரிவாக்கம் :**

**34.** புதுச்சேரியின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கும், விமானப் போக்குவரத்து வசதியை மேம்படுத்துவதற்கும், விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**35.** தற்போது, புதுச்சேரி விமான நிலையத்தின் ஓடுபாதை 1,500 மீட்டர் மட்டுமே உள்ளதால், பெரிய விமானங்களை இயக்குவதில் சிரமம் உள்ளது. இதைத் தீர்க்கும் வகையில், ஓடுபாதை 2,300 மீட்டராக நீட்டிக்கப்பட உள்ளது. இதன் மூலம் A320, A321 வகை பெரிய விமானங்களை இயக்க முடியும். மேலும், புதுச்சேரிக்கும் நாட்டின் முக்கிய நகரங்களுக்கும் இடையிலான விமான சேவை விரிவடையும்.

**36.** புதிய பயணிகள் முனையம், நவீன விமான நிலைய வசதிகள், மேம்பட்ட பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் கூடுதல் விமான நிறுத்துமிடங்கள் ₹ 4,800 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட உள்ளன. இந்தப் பணிகள் நிறைவடைந்த பிறகு, அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்ய முடியும். மேலும், புதுச்சேரி இந்த பகுதியின் முக்கிய விமானப் போக்குவரத்து மையமாக உருவாகும்.

*சர்வதேச வளர்ச்சி முகமை நிதியுதவித் திட்டங்கள்*

**(i) பிரெஞ்சு வளர்ச்சி முகமை (AFD) :**

**37.** பிரெஞ்சு வளர்ச்சி முகமை நிதியுதவியுடன், புதுச்சேரி நகர்ப்புறங்களில் குடிநீர் வழங்கும் அமைப்பை நவீனமயமாக்கி மேம்படுத்தும் வகையில் ₹ 534 கோடி மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, வில்லியனூர், ஜெயராம் நகர், அமைதி நகர், கணுவாப்பேட்டை,

உத்திரவாகினிப்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ₹179.68 கோடி செலவில் குடிநீர் வழங்கல் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுமார் 68 ஆயிரம் நபர்கள் பயனடைவார்கள். மேலும், ₹15.40 கோடி செலவில் நான்கு கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கூடுதலாக 70 ஆயிரம் நபர்கள் பயனடைவார்கள்.

**38.** அதோடு, புதிய நிலத்தடி நீர் ஆதாரங்களை உருவாக்குதல், குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் நாள் ஒன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் ₹42 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் நிறைவடைந்த பிறகு, புதுச்சேரியின் நீர்ப்பாதுகாப்பு வலுப்பெறும். நிலத்தடி நீரின் பயன்பாடு குறையும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பு முழுவதும் சுமார் 9 இலட்சம் மக்களுக்கு தொடர்ந்து சுத்தமான குடிநீர் வழங்க முடியும்.

**(ii) ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) :**

**39.** மத்திய அரசின் ஒப்புதலோடு நகர்ப்புற உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடு, ₹4,750 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி ஒருங்கிணைந்த நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் (PIULIP) செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ்

நரம்பையில் ₹ 500 கோடி மதிப்பீட்டில் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம், ₹ 150 கோடி மதிப்பீட்டில் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம், காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகளில் 24 மணி நேர குடிநீர் வழங்கும் திட்டம், புதுச்சேரியில் ₹ 550 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் பாதாள சாக்கடை வசதிகள் உள்ளிட்ட பல முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும், வடிகால் வசதிகள், கால்வாய்கள், கடற்கரை நடைபாதை, பெரிய வாய்க்கால், சாலைகள் மற்றும் பாலங்களும் மேம்படுத்தப்படும். இந்தத் திட்டம் நிறைவடைந்தால், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் மேம்படும். நகர்ப்புற உள்கட்டமைப்பு வலுப்பெறும்.

**(iii) PY-SHORE :**

**40.** உலக வங்கியின் நிதியுதவியுடன் ₹ 1,433 கோடி மதிப்பீட்டில் 'PY-SHORE' திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்துள்ளது என்பதை இந்த பேரவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்கவும், கடற்கரைகளைப் பாதுகாக்கவும், கடல்சார் வளங்களை மேம்படுத்தவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். கடற்கரை மேலாண்மை, பாதுகாப்பு கட்டமைப்பு, தடுப்புப் பாறைகள் அமைத்தல், சதுப்புநிலக் காடுகளை மீட்டெடுத்தல், நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு,

கழிவுநீர் மேலாண்மை போன்ற கடலோரப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகளுக்கு ₹ 875 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் மீனவக் கிராமங்களை மேம்படுத்துதல், நவீன மீன்வள கட்டமைப்பு வசதிகள், 'பாண்டி ஈக்கோ டிரெயில்', 'பாண்டி நெக்லஸ்', 'ஈக்கோ குரூயிஸ் முனையம்' போன்ற சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ₹ 439 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்**

**41.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களின் முன்னேற்றத்திற்கு எனது அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த 748 ஏழை குடும்பங்களின் முதல் இரண்டு பெண் குழந்தைகளின் திருமணத்திற்காக ₹ 7.23 கோடி திருமண நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**42.** பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதிலும் எனது அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகிறது. நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டு வருமானம் ஈட்ட முடியாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த 5,174 நபர்களுக்கு ₹ 10.75 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**43.** தீபாவளி, பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு இலவச ஆடைகளுக்குப் பதிலாக வங்கிக் கணக்கில் நேரடியாக நிதியுதவி வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, 1,56,781 பயனாளிகளுக்கு ₹ 26.33 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**44.** அனைவருக்கும் பாதுகாப்பான வீட்டு வசதி கிடைக்க வேண்டும் என்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. மாநில அரசின் வீட்டு வசதித் திட்டத்தை, பாரதப் பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தோடு இணைத்து, வீடு கட்டுவதற்கான நிதியுதவி ₹ 5.50 இலட்சத்திலிருந்து ₹ 7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்காக ₹ 4.75 இலட்சம் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த 1,150 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்காக ₹ 15.95 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள காட்டுநாயகன், மலக்குறவன், குறுமன்ஸ் மற்றும் எருகுலா ஆகிய சமூகங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசின் உதவியோடு எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம், பழங்குடியின சமூகங்கள் உரிய அங்கீகாரம் மற்றும் சட்டப்பூர்வ உரிமைகள் பெற்று வளர்ச்சி வாய்ப்புகளை பெற முடியும்.

**வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலம்**

**45.** வேளாண்மை, நமது புதுச்சேரியின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருகிறது. விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், சூழலுக்கு உகந்த விவசாய முறைகளை ஊக்குவிக்கவும் மத்திய – மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை எனது அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

**46.** பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ், 28,430 விவசாயிகளுக்கு ₹ 19.51 கோடி உற்பத்தி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை மற்றும் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதிலும் எனது அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. பாரம்பரிய விவசாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, சுமார் 200 ஹெக்டேர் பரப்பளவில் இயற்கை வேளாண்மை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பாரதப் பிரதமர் விவசாயிகள் நிதியுதவித் திட்டத்தின்கீழ், புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள 18,704 விவசாயிகளுக்கு ₹ 3.74 கோடி நிதியுதவி நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

**47.** பயிர் சேதத்தால் ஏற்படும் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், பாரதப் பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், காரிஃப் மற்றும் ரபி பருவங்களில் பாதிக்கப்பட்ட 8,829 விவசாயிகளுக்கு ₹ 8.45 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்**

**48.** கால்நடை வளர்ப்பையும், பால் உற்பத்தியையும் மேம்படுத்துவதற்கு எனது அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. கால்நடைகளின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், கால்நடை மருத்துவச் சேவைகளை வலுப்படுத்தவும், கால்நடை வளர்ப்போரின் வருமானத்தை அதிகரிக்கவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**49.** சுத்தமான பால் உற்பத்தியை ஊக்குவிக்கவும், பால் பண்ணைகளின் திறனை மேம்படுத்தவும் ₹ 2 கோடி செலவில் 297 கறவை இயந்திரங்கள் கால்நடை விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**50.** கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், நோய்களைத் தடுக்கவும் எனது அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஒன்றிய ஆட்சிப்பரப்பு முழுவதும் 64 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, கால்நடை மருத்துவச் சேவைகள், தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் நோய் தடுப்பு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**51.** தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து, பாண்லே நிறுவனத்தில் ₹ 34.35 கோடி மதிப்பீட்டில் புதிய ஐஸ்கிரீம் உற்பத்தி தொழில்சாலை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஐஸ்கிரீம் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 20,000 லிட்டராக அதிகரிக்கும்.

**கலை மற்றும் பண்பாடு**

**52.** புதுச்சேரியின் வளமான கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், தேசியத் தலைவர்களின் பங்களிப்பை நினைவுகூரவும், பண்பாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் எனது அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**53.** 'சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா' கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'வீடுதோறும் தேசியக் கொடி' இயக்கத்தில், புதுச்சேரி முழுவதும் பொதுமக்கள் உற்சாகமாக பங்கேற்றனர். இதன் மூலம் தேசப்பற்று மற்றும் தேசிய உணர்வு வலுப்பெற்றது.

**54.** அரியாங்குப்பம், பாரதியார் பல்கலைக்கூட வளாகத்தில் ₹ 19.53 கோடி மதிப்பீட்டில் தாகூர் கலாச்சார வளாகம் மற்றும் திறந்தவெளி அரங்கம் அமைக்கும் பணி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

**55.** புதுச்சேரியின் தொன்மையான வரலாற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், அரிக்கமேட்டில் ரோமப் பேரரசு கால சரக்குக் கப்பலின் மாதிரியுடன் விளக்க மையம் அமைக்கும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

## குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

**56.** உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பொதுவிநியோக அமைப்பை வலுப்படுத்துவதற்கும், தொழில்நுட்ப உதவியுடன் மக்களுக்கு விரைவான, வெளிப்படையான சேவைகளை வழங்குவதற்கும் எனது அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**57.** 2025-26 ஆம் நிதியாண்டில், பொது விநியோக முறையின்கீழ் ஏழைகள் உணவு பாதுகாப்புத் திட்டம் மற்றும் முன்னுரிமைக் குடும்ப அட்டைதாரர்கள் 1.91 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 6.34 இலட்சம் பயனாளிகளுக்கு மத்திய அரசின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக மாதந்தோறும் சுமார் ₹ 16 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**58.** மாநில பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச அரிசி, கோதுமை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு கூடுதல் உதவி வழங்கும் வகையில், கடந்த ஆண்டு தீபாவளியை முன்னிட்டு 3.46 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ₹ 20.72 கோடி செலவில் அத்தியாவசிய இலவச மளிகைப் பொருள் தொகுப்புகள்

வழங்கப்பட்டன. முதலமைச்சரின் சமையல் எரிவாயு மானியத் திட்டத்தின் மூலம், 2 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ₹ 31.20 கோடி மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**59.** மாண்புமிகு உறுப்பினர்களே, விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள் மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கூட்டுறவு இயக்கம் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்த நிதியுதவி, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்களை எனது அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**60.** உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் சேவைகளை மேம்படுத்தும் வகையில், நியாயவிலைக் கடை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் அங்காடிகளுக்கு ₹ 8.31 கோடி மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு பணியாளர் நிலுவைத் தொகை மற்றும் சட்டப்பூர்வக் கடமைகளை நிறைவேற்ற ₹ 39.01 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நியாயவிலைக் கடைகளுக்கான ஆண்டு மானியம் கடை ஒன்றுக்கு ₹ 90,000-லிருந்து ₹ 1.75 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**61.** மலிவு விலையில் வீட்டுவசதி கிடைக்கச் செய்வதற்காக, புதுச்சேரி மாநில கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலம் தொடக்க கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கு ₹ 23.08 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகச் செயல்பாட்டை மேலும் திறம்பட மாற்றியமைக்க, 45 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.

**மின்சாரம்**

**62.** மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மின்சாரம் முக்கிய பங்காற்றி வருகிறது.

**63.** வீடுகளில் சூரிய மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், பாரதப் பிரதமர் சூரிய மின்கூரைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 3,984 வீடுகளில் மேற்கூரை சூரிய மின் தகடுகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் 14 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உருவாகியுள்ளது. இதற்காக மத்திய அரசு ₹ 27 கோடி மானியம் வழங்கியுள்ளது. அதோடு, 3 kWp அல்லது அதற்கு மேற்பட்ட சூரிய மின் தகடுகள் அமைப்போருக்கு, மாநில அரசு கூடுதலாக அதிகபட்சம் ₹ 30,000 வரை மானியம் வழங்கி வருகிறது.

**64.** 10 துணை மின் நிலையங்களில் ₹ 200 கோடி செலவில் 50 MW / 200 MW மின்கலன் ஆற்றல் சேமிப்புத் திறன் கொண்ட அமைப்புகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இது மின்சாரத்தை சேமிக்கவும், அதிக மின் தேவை ஏற்படும் நேரங்களிலும் தடையற்ற மின்சாரம் வழங்கவும் உதவும்.

**65.** இலாசுப்பேட்டை, தவளக்குப்பம், திருபுவனை ஆகிய இடங்களில் ₹ 231.06 கோடி செலவில் புதிய 110/22 KV துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. தொண்டமாநத்தம் 230/110 KV துணை மின் நிலையத்தில் ₹ 26.14 கோடி செலவில் கூடுதலாக 100 MVA திறன் கொண்ட மின்மாற்றி நிறுவப்பட உள்ளது. மேலும், வெங்கட்டா நகர் முதல் இலாசுப்பேட்டை வழியாக ஜிப்மர் வரை ₹ 42 கோடி செலவில் 110 KV மின் புதைவடம் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது.

**66.** எதிர்கால மின் தேவையை கருத்தில் கொண்டு, NTPC தெலங்கானா நிறுவனத்துடன் 50 மெகாவாட் மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 2027-28 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டுக்கு வரும்.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**67.** மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், நலத்திட்டங்கள், உள்கட்டமைப்பு வசதிகள், நவீன தொழில்நுட்பத் திட்டங்கள் மற்றும் வாழ்வாதார திட்டங்களைச் செயல்படுத்த எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

**68.** 2025-26 ஆம் ஆண்டில், புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகளைச் சேர்ந்த 19,888 மீனவக் குடும்பங்களுக்கு ₹ 15.91 கோடி மீன்பிடித் தடைக்கால நிவாரணமும், 20,261 குடும்பங்களுக்கு ₹ 12.15 கோடி மழைக்கால நிவாரணமும் வழங்கப்பட்டது. மேலும், 9,634 மீனவ முதியோர்களுக்கு ₹ 32.75 கோடி ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

**69.** வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கவும், நீல பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் புதுச்சேரி மற்றும் காரைக்காலில், மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் கூண்டு மீன் வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இத்திட்டங்கள் மீனவர்கள், குறிப்பாக மீனவப் பெண்களுக்கு கூடுதல் வருமான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

**70.** காரைக்கால் மீன்பிடித் துறைமுகம் ₹ 130.17 கோடி செலவில் நவீன ஸ்மார்ட் மீன்பிடித் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. பாரதப் பிரதமர் அடிக்கல் நாட்டிய இந்தத் திட்டம், செயல்திறன், பாதுகாப்பு மற்றும் மீன்வள மேலாண்மையை மேம்படுத்தும் நவீன தொழில்நுட்ப வசதிகளை கொண்டிருக்கும்.

**71.** நரம்பை, பட்டினச்சேரி மற்றும் கருக்கலாச்சேரி பகுதிகளில் காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய கடலோர மீனவக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மீனவப் பெண்கள் கூட்டுறவு சங்கங்களை மையமாகக் கொண்டு, ₹ 1.92 கோடி செலவில் கடற்பாசி மற்றும் கூண்டு மீன் வளர்ப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**72.** அனைவருக்கும் குறைந்த செலவில், தரமான மருத்துவச் சேவைகளை வழங்குவதற்கு எனது அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. இதற்காக மருத்துவமனைகள், மருத்துவக் கல்வி மற்றும் சுகாதார உள்கட்டமைப்பு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது.

**73.** அரசு மருத்துவமனைகளில் நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள முக்கிய அரசு மருத்துவமனைகளில் சுமார் ₹ 36 கோடி செலவில் MRI, CT Scan, RT-PCR, ELISA, Digital X-Ray, Laparoscopic அறுவைச் சிகிச்சை கருவிகள் உள்ளிட்ட நவீன மருத்துவ உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**74.** பாரதப் பிரதமரின் 'ஆயுஷ்மான் பாரத்' சுகாதார உள்கட்டமைப்பு இயக்கத்தின்கீழ், இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், இந்திரா காந்தி அரசு

பொது மருத்துவமனை, கரிக்கலாம்பாக்கம் சமுதாய சுகாதார மையம், காரைக்கால் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் மொத்தம் ₹ 92 கோடி செலவில் 50 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**75.** காரைக்காலில், 30 படுக்கைகள் கொண்ட ஆயுஷ் மருத்துவமனை, தேனூர் சமுதாய சுகாதார மையத்தில் புதிய புறநோயாளிகள் பிரிவு கட்டிடம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**76.** புதுச்சேரி, மகாத்மா காந்தி முதுகலை பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் BDS மாணவர் சேர்க்கை 110-இல் இருந்து 125-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அன்னை தெரசா சுகாதார அறிவியல் நிறுவனத்தில், மாகியில் 40 B.Sc. நர்சிங் இடங்களும், காரைக்காலில் 20 ANM இடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

**77.** சுகாதார காப்பீட்டு திட்டங்களின் பயன் விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. ‘ஆயுஷ்மான் பாரத் வய வந்தனா’ திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 42,292 குடும்பங்கள் ஏற்கனவே பயனடைந்து வருகின்றன. மேலும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள 38,200 குடும்பங்களும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படுகின்றன. கடந்த ஆண்டில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில், 49,240 நபர்கள் ₹ 38.07 கோடி மதிப்பிலான

உயர்நிலை மருத்துவச் சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர். 341 ஆஷா பணியாளர்களின் மாதாந்திர ஊக்கத் தொகை ₹10,000-இல் இருந்து ₹18,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**78.** ஆயுஷ் மருத்துவ உள்கட்டமைப்பை விரிவுபடுத்தும் நோக்கில், வில்லியனூரில் 50 படுக்கைகள் கொண்ட புதிய ஆயுஷ் மருத்துவமனையில் புறநோயாளிகள் சேவை தொடங்கப்பட்டுள்ளது. விரைவில் உள்நோயாளிகள் சேவையும் தொடங்கப்படும்.

## உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி

**79.** அனைத்து மாணவர்களுக்கும் தரமான உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், கல்வித் தரம், மாணவர் நலன், கல்வி உள்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் வசதிகளை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்த அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**80.** பெருந்தலைவர் காமராசர் நிதியுதவித் திட்டத்தின்கீழ், CENTAC மூலம் தொழில்முறைப் படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு நிதியுதவி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் 793 மருத்துவ மாணவர்கள், 3,258 பொறியியல் மாணவர்கள், 852 செவிலியர் மாணவர்கள் என மொத்தம் 4,903 மாணவர்களுக்கு ₹26.14 கோடி கல்வி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**இந்து அறநிலையங்கள் மற்றும் வக்ஃபு**

**81.** சமய நிறுவனங்களை சிறப்பாக நிர்வகிக்கவும், பண்பாட்டு பாரம்பரியத்தை பாதுகாக்கவும், சிறுபான்மையின மக்களின் நலனை மேம்படுத்தவும் எனது அரசு உறுதிபூண்டுள்ளது. கோயில்களின் திருப்பணி மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ₹ 9.70 கோடி மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒரு கால பூஜை நடைபெற 225 கோயில்களுக்கு ₹ 67.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆண்டு உதவித்தொகை கோயில் ஒன்றுக்கு ₹ 20,000-லிருந்து ₹ 30,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**82.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள 18 கோயில்களில் மகா கும்பாபிஷேக விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. இதன் மூலம் சமய மரபுகளும் பண்பாட்டு பாரம்பரியமும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**தகவல் தொழில்நுட்பம்**

**83.** நிர்வாகத் திறனை மேம்படுத்தி, அரசு சேவைகளை விரைவாகவும், எளிதாகவும், வெளிப்படையாகவும் மக்களிடம் கொண்டு சேர்க்கவும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை எனது அரசு முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது. மின்னாளுகை மூலம் அரசு சேவைகள் திறம்பட வழங்கப்பட்டு வருகின்றன.

**84.** இதன் ஒரு முக்கிய முன்னேற்றமாக, யூனியன் பிரதேசத்தின் அனைத்து அரசு அலுவலகங்களிலும் e-Office முறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் காகிதப் பயன்பாடு குறைந்துள்ளது. கோப்புகள் விரைவாக பரிமாறப்படுகின்றன. முடிவுகள் விரைவாக எடுக்கப்படுகின்றன. இதன் மூலம் அரசு நிர்வாகத்தின் செயல்திறன் மேம்பட்டுள்ளது.

**85.** மாணவர்களின் டிஜிட்டல் திறனையும் தொழில்துறை அனுபவத்தையும் மேம்படுத்தும் நோக்கில் டிஜிட்டல் பயிற்சிப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ், 147 மாணவர்கள் 22 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் 12 மாதங்களுக்கு மாதம் ₹ 10,000 உதவித் தொகையுடன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### தொழிலாளர் நலம்

**86.** தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும், தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்கவும் எனது அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**87.** தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச்சூழல் விதிகள், 2020-ன் கீழ் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பு, இரவு நேரப் பணிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கூடுதல் நேரப் பணிக்கான விதிமுறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**88.** புதுச்சேரி கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு திருமண உதவி, மகப்பேறு உதவி, மருத்துவ உதவி, பண்டிகைக் கால உதவி, உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களுக்காக ₹ 23.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**89.** வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முதன்மையான நோக்கில், 2025-26 ஆம் ஆண்டில் புதுச்சேரி முழுவதும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் 2,212 நபர்கள் பங்கேற்றனர். அவர்களில் 889 நபர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

**உள்ளாட்சி**

**90.** அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல், பாதாளச் சாக்கடை வசதிகளை விரிவுபடுத்துதல், நீர்நிலைகளைப் புனரமைத்தல், நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவித்தல் என்ற நோக்கில் அம்ருத் 2.0 திட்டம் புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகளில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**91.** 2025-26 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் பல முக்கிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. புதுச்சேரி முதலியார்பேட்டை சுதானா நகரில் ₹ 14.96 கோடி செலவில் குடிநீர் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. புதுச்சேரியில்,

பாதாளச் சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் ₹ 4 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. காரைக்கால், நேரு நகர் மற்றும் தலத்தெரு பகுதிகளில் ₹ 17.60 கோடி செலவில் குடிநீர் வழங்கும் அமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**92.** காரைக்காலில் ஹிதர் பள்ளிக்குளம், சேனியார் குளம், புதுக்குளம் ஆகிய நீர்நிலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், ₹ 25.21 கோடி செலவில் 11 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மாகியில் ₹ 23 இலட்சம் செலவில் வளமரி குளம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஏனாமில் ₹ 7.60 கோடி செலவில் 5 MLD திறன் கொண்ட புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

**93.** பாரதப் பிரதமர் சாலையோர வியாபாரிகள் கடனுதவி (PM SVANidhi) திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு தொழில் தொடங்கவும், விரிவுபடுத்தவும் வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டில் 900-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் மொத்தம் ₹ 2.61 கோடி கடனுதவி பெற்றுள்ளனர்.

**94.** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்படும் நிதி ₹ 2 கோடியிலிருந்து ₹ 3 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**காவல் மற்றும் தீயணைப்பு சேவைகள்**

**95.** பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அவசரகால மீட்புப் பணிகளை வலுப்படுத்தவும், காவல் மற்றும் தீயணைப்பு துறைகளில் மனிதவளம், உள்கட்டமைப்பு மற்றும் நவீன வசதிகளை மேம்படுத்த எனது அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

**96.** காவல் துறையில் 125 காவலர்களும், 70 உதவி ஆய்வாளர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஊர்க்காவல் படையிலிருந்து 48 நபர்கள் நியமிக்கப்பட்டு காவல் துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு நிலையில் 171 காவல் பணியாளர்களுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. இலாசுப்பேட்டையில் ₹ 4.12 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய மூன்று மாடிக் காவல் நிலையக் கட்டிடம் திறக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு துறையில் நேரடி நியமனம் மூலம் 74 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

**பொதுப்பணிகள்**

**97.** மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சாலை, குடிநீர், சுகாதாரம், கல்வி, பொதுப் பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வலுப்படுத்தவும், புதுச்சேரி, காரைக்கால், மாகி பகுதிகளில் பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. மத்திய – மாநில அரசு மற்றும் சர்வதேச வளர்ச்சி முகமை நிதியுதவியுடன் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**98.** புதுச்சேரியில் விரிவான குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ₹ 47.12 கோடி செலவில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய இரண்டு அடுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், குடிநீர் குழாய்கள் மற்றும் உந்துவிசைக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**99.** வெள்ள பாதிப்புகளைத் தடுக்கவும், மழைநீர் விரைவாக வெளியேறவும், வடிகால்கள், வெள்ளநீர் கால்வாய்கள் மற்றும் உந்துவிசை அமைப்புகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் ₹ 83.50 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**100.** புதுச்சேரி, வில்லியனூர், மங்களம், உழவர்கரை, அரியாங்குப்பம், நெட்டப்பாக்கம் மற்றும் பாகூர் பகுதிகளில் நகர்ப்புற, கிராமப்புறச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்து வசதி மேம்பட்டுள்ளது. திருக்காஞ்சி படித்துறை, வடிகால் வசதிகள் மற்றும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**101.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டிடம், பாகூரில் ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளூரில் புதிய சமுதாய சுகாதார மையக் கட்டிடம், கரிக்கலாம்பாக்கத்தில் புறக்காவல் நிலையம், காஞ்சி மாமுனிவர் அரசினர் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் கூடுதல் வகுப்பறைகள், உப்பளம் இந்திரா காந்தி விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை ஹாக்கி மைதானம் மற்றும்

பார்வையாளர் அரங்கம் புதுப்பித்தல், அரியாங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்காக, ₹ 73 கோடிக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**102.** காரைக்கால் பகுதியில் குடிநீர் வசதியை மேம்படுத்தும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. ₹ 62.60 கோடி செலவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கங்கள், உந்துவிசை அமைப்புகள் உள்ளிட்ட வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாகி பகுதியில் உட்புறச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**103.** புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் 30 கிலோமீட்டருக்கும் அதிகமான சாலைகளை மேம்படுத்த மத்திய சாலை உள்கட்டமைப்பு நிதியின்கீழ், ₹ 41.95 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**வருவாய்**

**104.** பேரிடர் மேலாண்மையை வலுப்படுத்தவும், நில நிர்வாகத்தை நவீனமயமாக்கவும், ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு உதவிகளை வழங்கவும் எனது அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

**105.** ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2,193 ஏழைக் குடும்பங்களுக்கு ₹ 7.18 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 393 நிலமற்ற ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**106.** நில ஆவணங்களை நவீன முறையில் பராமரிக்கும் பணிகளும் முன்னேற்றம் அடைந்துள்ளன. புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப்பரப்பு முழுவதும் ஆளில்லா விமானம் மூலம் விரிவான நில அளவீடு மேற்கொள்ள இந்திய நில அளவைத் துறையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தேசிய புவிசார் அறிவு அடிப்படையிலான நகர்ப்புற நில அளவைத் திட்டமான NAKSHA புதுச்சேரியில் தொடங்கப்பட்டுள்ளது.

**ஊரக மேம்பாடு**

**107.** கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், நிலையான சமூகப் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யவும் எனது அரசு பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

**108.** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டில் 11.59 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில், 88 விழுக்காடு பணிகளை பெண்கள் மேற்கொண்டுள்ளனர். மொத்தம் 57,689 கிராமப்புறக் குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**109.** பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் 'லட்சாதிபதி மகளிர்' திட்டத்தின்கீழ், 15,000 பெண்களை லட்சாதிபதிகளாக உருவாக்கும் இலக்கில், இதுவரை 13,127 பெண்கள் அந்த நிலையை எட்டியுள்ளனர். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கைவினைத் தொழில், உணவுப் பதப்படுத்துதல் மற்றும் சேவைத் துறைகளில் ஈடுபட்டு தங்களது வருமானத்தை உயர்த்தியுள்ளனர்.

**110.** பாரதப் பிரதமர் கிராமச் சாலைத் திட்டம் III-இன் கீழ், புதுச்சேரி பகுதியில் சுமார் 72 கிலோமீட்டர் நீளமுள்ள கிராமப்புறச் சாலைகள் ₹ 52.73 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**பள்ளிக் கல்வி**

**111.** தரமான கல்வி அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் எனது அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அதற்காக கல்வித் தரத்தை உயர்த்துதல், மாணவர் நலத் திட்டங்களை வலுப்படுத்துதல், சத்தான உணவு வழங்குதல், பள்ளி உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**112.** பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கி, மாணவர்கள் தரமான கல்வி பெறுவதை உறுதி செய்யும் வகையில், 184 தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், 214 பட்டதாரி ஆசிரியர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 38 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**113.** பெற்றோரின் பொருளாதாரச் சுமையை குறைக்கும் வகையில், புதுச்சேரி முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 89,128 மாணவர்களுக்கு 2025-26 ஆம் ஆண்டு இலவச பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ₹ 16.49 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**114.** மாணவர்களின் தொழில்நுட்பம் சார்ந்த கல்வியை ஊக்குவிக்கவும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 12-ஆம் வகுப்பு முடித்த மற்றும் 11-ஆம் வகுப்பு பயிலும் மொத்தம் 15,783 மாணவர்களுக்கும் ₹ 59.97 கோடி செலவில் இலவச மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**115.** மாணவர்களின் உடல்நலத்தையும், ஊட்டச்சத்தையும் மேம்படுத்தும் நோக்கில், பாரதப் பிரதமர் ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ், 65,856 மாணவர்களுக்கு ₹ 13.47 கோடி செலவில் சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

**116.** மாணவர்களிடையே ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில், மாலை நேர சிறுதானிய சிற்றுண்டித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ₹ 3.71 கோடி செலவிடப்பட்டுள்ளது. பள்ளி ஊட்டச்சத்து திட்டப் பணியாளர்களின் மாத ஊதியம் ₹ 18,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 894 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**சமூக நலம்**

**117.** மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், கடந்த ஆண்டு 20,767 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ₹ 3,000 முதல் ₹ 4,800 வரை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ₹ 88.62 கோடி செலவிடப்பட்டு உள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச அரிசிக்குப் பதிலாக, வங்கிக் கணக்கில் நேரடியாக நிதியுதவி செலுத்தப்பட்டுள்ளது. 20,767 பயனாளிகளுக்கு ₹ 11.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்**

**118.** இளைஞர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்கவும், நவீன விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், திறமையான வீரர்களை ஊக்குவிக்கவும் எனது அரசு உறுதிபூண்டுள்ளது. காரைக்கால் மாவட்ட விளையாட்டரங்கில் ₹ 9.95 கோடி செலவில் புதிய செயற்கை இழை தடகள ஓடுதளம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**119.** உப்பளம், இந்திரா காந்தி விளையாட்டு வளாகத்தில், 'கேலோ இந்தியா' திட்டத்தின்கீழ், ₹ 7 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள உலகத் தரத்திலான செயற்கை இழை தடகள ஓடுதளத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் திறந்து வைத்தார். விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் சர்வதேச, தேசிய மற்றும் தென்மண்டல அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு, கடந்த ஆண்டு ₹ 1.40 கோடி ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

**சுற்றுலா**

**120.** சுற்றுலா உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் தல மேம்பாட்டுப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2047 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு, புதுச்சேரியின் எதிர்கால சுற்றுலா வளர்ச்சிக்கான விரிவான தொலைநோக்கு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**121.** 'சுதேஷ் தர்ஷன் 2.0' திட்டத்தின்கீழ், காரைக்கால் கடற்கரையை மேம்படுத்த ₹ 20.29 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. CRZ அனுமதி பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், CBDD திட்டத்தின்கீழ், ₹ 22.50 கோடி செலவில் பிரெஞ்சு நகரப் பகுதியை அழகுபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், மத்திய அரசின் "பிரஷாத்"

திட்டத்தின்கீழ், திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்த ₹ 25.94 கோடி மதிப்பிலான திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

**122.** சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில், சாகச சுற்றுலா மற்றும் நீர்விளையாட்டு சுற்றுலாவை எனது அரசு ஊக்குவித்து வருகிறது. தற்போது 62 நிறுவனங்களுக்கு இந்தச் சேவைகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## நகர மற்றும் கிராமத் திட்டமிடல்

**123.** பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு குறைந்த செலவில் சொந்த வீடு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டம் – நகர்ப்புறம் 1.0 திட்டத்தின்கீழ், 839 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், பயனாளிகளுக்கு ₹ 14 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**124.** நகர்ப்புற வளர்ச்சியை வேகப்படுத்தவும், தொழில் தொடங்குவதை எளிதாக்கவும், புதுச்சேரி கட்டிட விதிகள், 2012 மற்றும் மண்டல ஒழுங்குமுறைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த சீர்த்திருத்தங்கள் அனுமதி பெறும் நடைமுறைகளை எளிமையாக்கவும், கால அளவைக் குறைக்கவும், தொழில்துறை முதலீடுகளை ஊக்குவிக்கவும் உதவும்.

**போக்குவரத்து**

**125.** நகரங்களுக்கு இடையிலான இணைப்பு மற்றும் பயணிகளுக்கான சேவையை மேம்படுத்தும் வகையில், குளிர்சாதன வசதி கொண்ட சொகுசு பேருந்துகள் உட்பட 20 புதிய பேருந்துகள் வாங்கப்பட உள்ளன. மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க மானியம், வரிச் சலுகை, சார்ஜிங் நிலையங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

**126.** பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பாரம்பரிய தொழில்களைப் பாதுகாக்கவும், மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும் எனது அரசு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், கர்மவீரர் காமராஜர் திட்டத்தின்கீழ் 2025-26 ஆம் ஆண்டில் 9 ஆம் வகுப்பில் பயிலும் 8,861 மாணவர்களுக்கு ₹ 5.55 கோடி செலவில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு**

**127.** முதியோர், பெண்கள், குழந்தைகள் மற்றும் சமூகத்தில் பின்தங்கியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களுடைய சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**128.** புதுச்சேரி முதியோர் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், கூடுதலாக 15,000 நபர்கள் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 1,96,616-ஆக உயர்ந்துள்ளது.

**129.** பொருளாதார பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில், அனைத்து பிரிவினருக்கும் வழங்கப்படும் மாதாந்திர முதியோர் ஓய்வூதியம் ₹ 500 உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, 55 முதல் 59 வயதுடையவர்கள் ₹ 2,500, 60 முதல் 79 வயதுடையவர்கள் ₹ 3,000, 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் ₹ 4,000 பெறுகின்றனர். விதவைகள், ஆதரவற்ற பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கும் மாதம் ₹ 2,500 நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக 2025-26 ஆம் ஆண்டில் ₹ 563.33 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**130.** வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத் தலைவிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி ₹ 1,000-லிருந்து ₹ 2,500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 63,000 பெண்கள் பயனடைந்துள்ளனர். ஏழை மணப்பெண்கள், ஆதரவற்ற விதவைகளின் மகள்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கான நலத்திட்டங்களின்கீழ், 424 பயனாளிகளுக்கு ₹ 2.31 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## நிறைவுரை

**131.** 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் தேசிய இலக்கிற்கு ஏற்ப, வளமான, தன்னிறைவு பெற்ற, இளைஞர்களுக்கு வாய்ப்புகள் நிறைந்த, வளர்ச்சியடைந்த புதுச்சேரியை உருவாக்க எனது அரசு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வருகிறது. நல்லாட்சி கொள்கை, சமூக நீதி மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொதுச் சேவைகளை மேம்படுத்த, புதிய வளர்ச்சி வாய்ப்புகளை உருவாக்கவும் எனது அரசு தொடர்ந்து பாடுபடும்.

**132.** வரும் ஆண்டில், உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை உருவாக்குதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், மக்களை மையமாகக் கொண்ட நல்லாட்சியை வலுப்படுத்துதல் ஆகிய துறைகளில் எனது அரசு தீவிரமாக செயல்படும். ஒன்றிய ஆட்சிப்பரப்பின் அனைத்து பகுதிகளும் சமமாக வளர்வதையும், அனைத்து மக்களின் நலனை பாதுகாப்பதையும் எனது அரசு உறுதி செய்யும்.

**133.** மாண்புமிகு உறுப்பினர்களே, இந்தக் கூட்டத் தொடரில் 2026-27 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம், நிதி ஒதுக்கீட்டு மசோதாக்கள் மற்றும் பிற சட்ட முன்வரைவுகள் இப்பேரவையின் பரிசீலனைக்காக முன்வைக்கப்பட உள்ளன.

**134.** புதுச்சேரியின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் வலுசேர்க்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமான விவாதங்களில் பங்கேற்று தங்களது மதிப்புமிக்க கருத்துகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவீர்கள் என்ற முழு நம்பிக்கை எனக்கு உள்ளது.

**135.** இந்தக் கூட்டத் தொடர் பயனுள்ள விவாதங்களுடன் சிறப்பாக நடைபெற என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***வாழ்க பாரதம் !***

***வளர்க புதுச்சேரி !!***

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.
வெளியிட்டோர் : நிதித்துறை. புதுச்சேரி – 605 001.